**புதுச்சேரி அரசு**
**தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகம்**

எண்: 2204/CEO/Press/2026 தேதி: 22.04.2026

**<u>செய்தி குறிப்பு</u>**

**பொருள்:** 23.04.2026 அன்று நடைபெறும் தமிழ்நாடு மாநில தேர்தலை முன்னிட்டு புதுச்சேரியில் பணிபுரியும் தமிழ்நாடு வாக்காளர்களுக்கு ஊதியத்துடன் விடுமுறை வழங்குதல் – தொடர்பாக.

*****

தமிழ்நாடு சட்டப்பேரவைக்கான பொதுத் தேர்தல் வருகின்ற **23.04.2026 (வியாழக்கிழமை)** அன்று நடைபெற உள்ளது. மேலும் மேற்கு வங்காளத்தில் இருக்கட்டமாக தேர்தல், வருகின்ற 23.04.2026 மற்றும் 29.04.2026 ஆகிய நாட்களில், நடைபெற உள்ளது

2. இது தொடர்பாக, **மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951 (Representation of the People Act, 1951) -இன் பிரிவு 135B** படி, தேர்தலில் வாக்களிக்கும் உரிமை கொண்டுள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் வாக்களிக்கச் செல்ல தேர்தல் நாளன்று **ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்பட வேண்டும்.**

3. மேற்கண்ட விதிமுறை கட்டாயமானது ஆகும். இது அரசுத் துறை நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் பிற அமைப்புகள் உள்ளிட்ட அனைத்து வகை நிறுவனங்களுக்கும் பொருந்தும். மேலும், இந்த விடுமுறைக்காக ஊதியத்தில் எந்தவித குறைப்பும் செய்யக்கூடாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறும் நிறுவனங்களின் உரிமையாளர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

4. எனவே, புதுச்சேரி ஒன்றியப் பிரதேசத்தில் செயல்படும் அனைத்து நிறுவனங்களும், தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்க மாநில வாக்காளர்களாகப் பதிவுசெய்யப்பட்டுள்ள தங்களது ஊழியர்களுக்கு, அவர்கள் தங்கள் தொகுதிகளுக்கு சென்று வாக்களிக்க ஏதுவாக **தேர்தல் நடக்கும் நாட்கள் அன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்க வேண்டும்** என அறிவுறுத்தப்படுகிறது.

5. தனியார் துறை, தொழிற்துறை, தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், கட்டுமானத் துறை மற்றும் வணிக நிறுவனங்கள் உள்ளிட்ட நிறுவனங்களின் உரிமையாளர்கள் மேற்கண்ட சட்ட விதிமுறைகளை கவனத்தில் கொண்டு, தமிழ்நாடு மாநிலத்தைச் சேர்ந்த தங்கள் ஊழியர்கள் வாக்களிக்கச் செல்ல முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அதிகபட்ச வாக்காளர் பங்கேற்பை உறுதி செய்வதில் நிறுவனங்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது.

6. தற்போது புதுச்சேரியில் பணிபுரியும் தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்க மாநில வாக்காளர்கள் அனைவரும், இந்த வாய்ப்பை பயன்படுத்தி தங்கள் வாக்குரிமையை தவறாமல் பதிவு செய்து தேர்தலில் முழுமையாக பங்கேற்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. புதுச்சேரி ஒன்றியப் பிரதேசத்தில் அமைந்துள்ள கல்வி நிறுவனங்களில் தற்போது கல்வி பயிலும், தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கத்தில் வாக்காளர்களாக பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் மேற்கண்ட தேர்தலில் தங்கள் வாக்குரிமையை பயன்படுத்தத் தகுதியானவர்கள் என்பதும் வலியுறுத்தப்படுகிறது. பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பள்ளிகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களின் தலைவர்கள், அத்தகைய மாணவர்கள் தங்களது தொகுதிகளுக்கு சென்று வாக்களிக்க தேவையான விடுப்பு அல்லது அனுமதியை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மாணவர் வாக்காளர்களுக்கு இவ்வாறு வசதி செய்து வழங்குவது ஜனநாயக பங்கேற்பை உறுதிப்படுத்துவதற்கும், கல்விசார் பொறுப்புகள் காரணமாக எந்தத் தகுதியான வாக்காளரும் வாக்களிக்கும் வாய்ப்பை இழக்காமல் இருப்பதற்கும் இன்றியமையாததாகும்.

8. சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை அதிகபட்ச வாக்காளர் பங்கேற்புடன் நடத்துவது ஒவ்வொருவரின் பொறுப்பாகும்; இது வலுவான ஜனநாயகத்தின் அடித்தளமாகும்.

**ப. ஜவஹர், I.A.S.**
தலைமை தேர்தல் அதிகாரி
புதுச்சேரி